பல்கலைக்கழகத்தில் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி குறுகிய காலத்திலே, குட்டையாக வளர்கிற அந்தப் பனைமரத்தின் மூலமாக வருகின்ற பொருள்கள், குறைந்த கால அளவிற்குத்தான் பலன் தரும் என்று வந்து விடுமானால், குட்டையான மரங்களிலே இருந்து வருகின்ற பொருள்களில் அந்த வாய்ப்பு வசதிகளை நாம் பெறமுடியாது. எனவே இதுகுறித்து ஒரு ஆய்வு நடத்தி, முழு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அதுபோன்று மைய பனைத் தொழில் ஆராய்ச்சிக் கழகமும் ஒரு ஆய்வு நடத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் இன்னும் முடிவு எடுக்கப் படவில்லை. முடிவு எடுக்கப்பட்டதற்குப் பிறகுதான் மாண்புமிகு உறுப்பினர் கேட்ட நிலையைப் பற்றித் தெரியவரும். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன மற்றொரு கருத்து குறித்து அரசினுடைய பரிசீலனையில் இருந்துவருகிறது.

கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு மற்றும் ஓட்டேரி பகுதிகளில் குடியிருப்புகள் மழையினால் பாதிப்பு.

529—(வினா எண். 7286)* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூவம், பக்கிங்ஹாம் கால்வாய், அடையாறு, ஓட்டேரிநல்லா ஆகியவற்றில் மழைக் காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கால் மக்கள் குடியிருப்பு பாதிக்கப்படுவதைத் தடுக்க அரசின் செயல் திட்டமென்ன?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூவம் ஆறு மற்றும் ஓட்டேரிநல்லாவில் தூர் எடுக்கும் கருத்துருக்கள் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது. பக்கிங்ஹாம் கால்வாய் கரைகளை வலுப்படுத்தவும், கால்வாயை ஆழப்படுத்தவும் மதிப்பீடுகள் மைய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளன. அடையாறு ஆற்றில் வெள்ளத்தடுப்புப் பணிகளுக்கு, ரூ. 84 இலட்சம் அரசு ஏற்கெனவே அங்கீகரித்துள்ளது. மேலும், ரூ. 2 கோடி அனுமதித்துள்ளது. இப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 28]

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மழைக்காலத்திலும் மேற்கண்ட கால்வாய்க் கரைகளை ஒட்டியிருக்கின்ற பல்வேறு குடியிருப்புப்பகுதிகளிலும் பல நூற்றுக்கணக்கான பேர்கள் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகின்ற சம்பவம் தொடர்ந்து வருகின்றதே. இத்தகைய வெள்ளப் போக்கின் காரணமாக பாதிக்கப்படுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனை என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை என்னிடம் இல்லை. வெள்ளத்தாலே குடியிருப்புகள் பாதிக்கப்படுவதற்கு காரணம், பல இடங்களில் நேரடியாகச் சென்று பார்க்கின்ற நேரத்தில், வெள்ளம் வருகின்ற நேரத்தில் எந்த அளவிற்கு உயர் மட்டத்திலே வெள்ளம் வருமோ அதற்கு தாழ்வான பகுதியிலே குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அதிகாரிகள் அதை அப்புறப் படுத்தச் செல்லும் நேரத்தில் அதை அப்புறப்படுத்த முடியாமல் திரும்பி வருகின்ற ஒரு துர்பாக்கியமான சூழ்நிலை இன்றைக்கு சென்னையிலே இருக்கிறது. வெள்ளம் வருகின்ற நேரத்தில் பாதிக்கப்படுகிறார்கள் என்றால் அதற்கு அவர்கள்தான் காரணம்.

திரு. கே. சுப்பராயன்: பேரவைத் தலைவர் அவர்களே, நிரந்தரத் தீர்வு ஏற்படுத்துவதற்கு இடையிலே, மழை வருகின்ற நேரத்திலே அவர்களுடைய பாதிப்புகளை தடுப்பதற்குரிய தற்காலிக ஏற்பாடுகளாக அரசு ஏதாவது செய்ய இருக்கிறதா என்பதை அறிய விரும்புவதோடு, மத்திய அரசிடமிருந்து அந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு எந்த கால வரம்பிற்குள் அது நிறைவேற்றப்படும் என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, **தற்காலிக** ஏற்பாடாக பக்கிங்ஹாம் கால்வாயில் ஏறத்தாழ **6¼ கோடி ரூபாய்க்கு** மத்திய அரசுக்கு மதிப்பீடு அனுப்பியிருக்கிறோம். கூவத்திலே 1¼ கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டினை தூய்மைக்கேடு கட்டுப்பாடு வாரிய பெருந்திட்டத்தில் சேர்க்க. தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓட்டேரி

நல்லாவில் 1¼ கோடி ரூபாய்க்கான மதிப்பீட்டினை உலகவங்கி உதவியுடன் எடுத்துக்கொள்ளப்படவுள்ள திட்டங்களில் சேர்க்க மாநகராட்சிக்குத் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து ஞாபகப் படுத்தி மிக வேகமாகப் பெறுவதற்குரிய முயற்சிகளை இந்த அரசாங்கம் எடுக்கும்.

திருமதி டி. யசோதா: தலைவர் அவர்களே, அடையார் ஆற்றிலே வெள்ளம் ஏற்படுகிறது என்று சொன்னால் மழைக் காலங்களில் செம்பரம்பாக்கம் ஏரி நிரம்புகின்ற காரணத்தாலே ஏரி உடைப்பெடுத்துவிடும். அதனால் மிகப்பெரிய நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று அதை தவிர்க்கின்ற வகையில் அரசே அதை திறந்துவிடுகின்ற காரணத்தாலே வெள்ளம் அதிகரிக்கின்றது. ஆகவே செம்பரம்பாக்கம் ஏரியிலே அதிகமாக நீர் தேங்குகின்ற போது அதை சேமிப்பதற்கு வேண்டிய சேமிப்பு வங்கியும், அதே நேரத்திலே தடுப்புச் சுவரும் அமைப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அந்தக் கண்மாயிலே அதிகப்படியான தண்ணீர் நிற்கவேண்டுமென்றால் கரைகளை நாம் உயர்த்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. கரைகளை உயர்த்துகின்ற நேரத்தில், பின்னாலே நீர்ப்பிடிப்பு பகுதிகள் அதிகமாக பாதிக்கப் படும் என்ற உணர்வை அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் வெள்ளம் வருகின்றபோது எந்த அளவிற்குப் பாதகம் இல்லாத சூழ்நிலையை உருவாக்க முடியும் என்பதையும் அதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு விவரமாகச் சொல்லியிருக்கிறோம்.

குடியாத்தம் தாலூக்காவில் மோர்தானா அணைக்கட்டு.

530—(* வினா எண். 9309) திரு. ஆர். கோவிந்தசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் தாலூக்காவில் மோர்தானா அணைக் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?